போர்வாள்

...திராவிடர் வார வெளியீடு...

வாள் 1

திருவள்ளுவர் ஆண்டு 1979 மாசி 23

6-3-48 சனிக்கிழமை

வீச்சு 29

ஆசிரியர்கள்:

"வயதில் அறிவில் முதியார்—நாட்டின்
வாய்மைப் போருக் கென்றும் இளையார்"
உயர் எண்ணங்கள் மலரும் சோலை!

காரல் மார்க்ஸ்

[ஆக்கியோர்: எஸ். சநாசிவம். கிடைக்குமிடம்: இன்பவாழ்வுப் பதிப்பகம், ஆர். எஸ். புரம், கோயமுத்தூர். விலை ரூ. 1-0-0]

பாட்டாளி மக்களுக்குப் புது உலகப் பாதையைச் சுட்டிக் காட்டிய தீர்க்கதரிசி காரல் மார்க்ஸின் தத்துவங்களைச் சுருக்கமான முறையில் படம்பிடிப்புச் செய்துள்ளார் இந் நூலாசிரியர். இவர் தன் கருத்தை விளக்கும் முறையும், நடையில் உள்ள தெளிவும் கண்டு மகிழற்குரியன. மார்க்ஸீய எண்ணங்களை இன்னும் கொஞ்சம் விளக்கி இருக்கலாம். ஆனால் புத்தகத்தின் சிறிய அளவை எண்ணும் போது இதற்கு மேல் விளக்குவது முடியுமா என்ற ஐயப்பாடும் தோன்றுகிறது. மொத்தத்தில் இது ஒரு நல்ல புத்தகம்.

பனித்துளியிலே!

[விலை ரூ 1-0-0 கிடைக்குமிடம்: தமிழர் பதிப்பகம் 81. லிங்கி செட்டித் தெரு, சென்னை.]

கண்டால் அழகு; படித்தால் சிந்தனை; முடித்தால் மகிழ்ச்சி—இது மதிப்புரையின் சுருக்கம்.

தமிழ் நாட்டில் உள்ள சிறந்த பேச்சாளர்களில் ஒருவரான திருச்சி விசுவநாதத்தின் எழு அரிய சொற்பொழிவுகளை ஒருங்கு திரட்டி ஓருருவில் கொடுத்துள்ளது தமிழர் பதிப்பகம். பேச்சுக் கலை பயில்லும் இளைஞர் கரத்தில் எல்லாம் தங்கும் உரிமையும் பெருமையும் இந் நூலுக்கு உண்டு. —இது மதிப்புரையின் விளக்கம்.

ஒரு ரூபாயை அனுப்பினால் வாசலிலே அலைமோதிய சில சிறந்த எண்ணங்கள் நூல் வடிவில் உங்களைத் தேடி வரும்—இது மதிப்புரையின் சுருக்கம், விளக்கம், இரண்டையும் படித்த பிறகு உங்கள் உள்ளம் உங்கட்குக் கூறும் முடிவு.

ஏன், நாம் சொல்வது சரிதானே!

சிறு கதைகள்

[தீட்டியவர்: சி. என். அண்ணாதுரை M. A. விலை ரூ 1-0-0 திராவிடப் பண்ணை, தெப்பக்குளம், திருச்சி]

தலைப்பைப் பார்த்தவுடனே இப் புத்தகத்தில் ஏராளமான சிறுகதைகள் இருக்கும் என்று எண்ணி ஏமாந்து விடாதீர்கள். புத்தகத்தைப் பிரித்தால் உள்ளே இருப்பவை நாலே நாலு கதைகள் தான்! ஆமாம், உண்மையாக!

இருப்பவை நான்கு **கதைகள்** என்றா சொன்னேன்? அல்ல! தவறு! நான்கு **உலகங்கள்**! ஒவ்வொரு சிறு கதையும் ஒரு குட்டி உலகம். உள்ளே நுழைந்துவிட்டால், பயணம், நம்மை எங்கெங்கோ அழைத்துச் செல்கிறது; பல புதிய உண்மைகளை நமக்குச் சுட்டிச் சுட்டிக் காட்டுகிறது; எந்தெந்தக் குப்பைகளில் எல்லாமோ மறைந்து கிடக்கும் பல வைரக் கற்களையும் நமக்கு நன்கு உணர்த்தி விடுகிறது.

சமுதாயம் வாழ்க்கையில் வழுக்கி விழும் பலரைக் குற்றவாளிகள் என்று இழித்துக் கூறி ஒதுக்கித் தள்ளுகிறது. ஆனால் உண்மையான குற்றவாளி, தன் மீது தவழும் பலரும் சருக்கி விழும் படியாக அமைந்துள்ள சமுதாயத்தின் அமைப்பு முறையே தவிர வேறில்லை என்பதே இச்சிறு கதைகளின் அடிப்படை. இந்த அடிப்படையை நன்குணராதவர்கள் சிறு கதைகளின் சுவையை முழுதும் நுகர முடியாது.

இப்புத்தகத்தில் உள்ள 'பாதகனுக்குக் கட்டிய தாலி' என்ற சிறுகதை, படிப்பவர் நெஞ்சத்தில் ஆழப் பதிந்து விடும். மனப் பண்பு விளக்கம் என்ற துறையைச் சேர்ந்தது இக்கதை. இதில், சொல்லாதது என்னும் சிறு சொல் பம்பரம் போல் சுழன்று சுழன்று கதையை நடத்திச் செல்லும் அழகு இருக்கிறதே, அதற்கு வசிப்படாதவர்கள் எவரும் இருக்க முடியுமா? இத்தகைய அழகு வாய்ந்த கற்பனை யத்தை உருவாக்கும் வல் அறிஞர் அண்ணாதுரையின் ஒன்றுக்குத் தவிர வேறு பேனாவுக்கேனும் இருக்க முடி

இரண்டும் முடியாதென தோன்றுகிறது.

நாஸ்திகர் யார்? ஆஸ்திகம் எது?

[ஆக்கியோர்: கா. அப் துரை எம். ஏ. எல். டி. வி 0-6-0 முத்தமிழ் நிலையம் வாதா முத்தியப்பன் தெ சென்னை 1.]

நாஸ்திகப் பண்டிதர் குழு ஒழித்துக் கட்டுவோம் என்று அமைச்சர்கள் "கவாத்துப்" கூறும் இந் நாளில், நாஸ்திகர் ஆஸ்திகம் எது, என்பவை விளக்குவது கொஞ்சம் அப மான வேலை தான். ஆனால் வேலையைத் தான் திறம்பட திருக்கிறார் அறிஞர் அப்பாத் இந்தச் சிறு புத்தகம் கள் மன்றத்தில் தாராளமாக மாட வேண்டும். ஆனால் முன்பு கல்வி அமைச்சர் உ தில் நடமாட வேண்டும். மாடுமா? நடமாடினால் எவ் நன்றாயிருக்கும்? தமிழ்ப் துக்கம் எவ்வளவு குறையும்

———

கடிதம்

திருவாளர் கி. ஆ. பெ. விசுவநாதம்,
மணிவாசகத் தமிழகம், திருச்சி.

..ழியில் நீர் பெருக, நெஞ்
..தில் ஆறாத் துயர் பெருக,
..ல் ஒலிப்பில் சோகமும் சோர்
.. இணைந்துறவாட, வேதனை
..ண்பா வாசிக்கும் முன்னாள்
..பதியே,

..வணக்கம். உடல் நலம்
..னே? வீட்டில் உள்ளார்
..னவரும் நலம்தானே? புகை
.. ஏற்றுமதித் தொழில் வளம்
..ம்தானே? நிலச் சாகுபடியும்
.. நிலையில் உள்ளதுதானே?
..ரமாய் எழுதுங்கள். தமிழர்
..கம் இருக்கட்டும், "தமிழர்
.."கிழமை இதழ் இருக்கட்
.. உங்கள் கழகத்தின் சார்
..நீங்கள் அமைத்த "தமிழர்
..ரி சபை" இருக்கட்டும்,
..ழ்த்தொண்டும் தமிழ் மருந்
.. தமிழ் எண்ணும் தமிழ்
..டும் இருக்கட்டும், பொதுப்
..யும் பொது வாழ்வும்
..துநல நோக்கும் இருக்கட்
.. உங்கள் உடலும் உளமும்
..ழிலும் நலமா? அதை எழு
..ள் முதலில், அதுதானே
..ில் தெரியவேண்டும்!

* * *

..ங்கள் அனுப்பிக் கொடுத்த
..ழர் நாடு" பத்திரிகை
..த்தது. அதில் உங்கள்
..ங்கத்தைப் படித்தேன்.
..க் கண்ணீர் வடித்தேன்.

**..யற்சித்தேன்: ஏமாந்தேன்"
..ற்சித்தேன்: தோல்வி அடைந்தேன்" "முயற்சித்தேன்: பயன் படவில்லை" "....ஆகவே "தமிழர் நாடு' தொண்டையும் தமிழர் கழகத் தொண்டையும் இன்னும் நான்கு வாரங்கள் அதாவது மார்ச்சு மாதக் கடைசியோடு முடித்துக் கொள்ள எண்ணியிருக்கிறேன்."**

உங்கள் தலையங்கத்தைப் படித்துக்கொண்டே போன போது இந்த வார்த்தைகள் ஆங்காங்கே அமைந்திருக்கக் கண்டேன். உள்ளம் கலங்கினேன். கசிந்து கண்ணீர் மல்கினேன். திடுக்கிட்டுத் தேம்பினேன். நம் விசுவநாதமா வாடுகிறார் என்று எண்ணி வாடினேன்.

தேர்விலே தவறிய மாணவன் கொஞ்சம் நெஞ்சுறுதி அற்றவனயின், தன் விழியிலே பெருக்குவானே நீர் அருவி, அது போல, காதலனைப் பிரிந்த காதலி உள்ளம் உருகின்று, ஆற்றாமை மிக்கமையால், அழுது தீர்ப்பாளே, அதுபோல, தான் விரும்பிய காதலியை அவள் பெற்றோர் வேறு எவர்க்கோ தந்தபோது காதலன் நெஞ்சு நைந்து வாடி வதங்குவானே அதுபோல உங்கள் தலையங்கம், எது எதையோ சொல்லிச் சொல்லிப் புலம்பிடக் கண்டேன். அந்தோ இது கொடிது கொடிது என்று சொல்லிச் சொல்லி நான் வருந்தினேன்.

நான் வருந்தினேன் என்று வேண்டுமென்றேதான் எழுதுகிறேன். எனக்கும் என்னைச் சேர்ந்த பல்லாயிரவர்க்கும் அரிய ஓர் தளபதியாய் அன்றொருநாள் விளங்கிய நீங்கள்—சுயமரியாதைச் சூறாவளிப் படையினர்க்கிடையே உண்மையிலேயே 'வீர உலா' நிகழ்த்தி வந்த நீங்கள்—அந்த மாவீரர் பெரியாரிடம் பல ஆண்டுகள் நெருங்கிப் பழகி தமிழர் படைகளை நடத்தும் பண்பும் பயிற்சியும் தெள்ளத் தெளியக் கற்றுணர்ந்த நீங்கள் — தோல்வி என்பதையே தன் வாழ்வில் கண்டறியாத தன்மானத் தோழர் குழுவிலே பிறந்து வளர்ந்து வெளியேறிய நீங்கள், இன்று, "முயற்சித்தேன் — தோல்வி அடைந்தேன்" என்று பத்திரிகையிலே தலையங்கம் எழுதி, அதற்கு **எனது தோல்வி** என்று மகுடமும் சூட்டக் கண்டால் நான் வருந்தாதிருக்க முடியுமா? இப்படிப்பட்டவர் நம் முன்னாள் தளபதியாய் இருந்தாரே என்று எண்ணி தலை குனியாதிருக்க முடியுமா? நம்முடைய பாசறையிலிருந்து வெளியேறிய வீரர் ஒருவர் விழியில் நீர் பெருக்கினாரே, பொதுவாழ்க்கைக் களத்திலே நின்றுகொண்டு, தோற்றேன் தோற்றேன்—எனவே பொது வாழ்க்கைப் பணியிலிருந்து விலகுகிறேன் விலகுகிறேன் என்று இரங்கல் உரை பகர்கிறாரே என்பதை நினைக்க நினைக்க என் கண்கள் வேதனை ஊற்றுகளாக மாறாமல் இருக்க முடியுமா?

சுயமரியாதை இயக்கத்தையும், அதைத் தழுவிப் பிணைந்து இணைந்து ஓங்கி வளர்ந்துவரும் திராவிடர் இயக்கத்தையும், இரண்டு இயக்கங்களையும் தம்முடைய ஓயாத உழைப்பு என்னும் நீர் பாய்ச்சி வளர்த்துவரும் தியாகத் தந்தை பெரியார் இராம

சாமியையும் என்னதான் இன்று நீங்கள் தாக்கித் தாக்கி எழுதினாலும், நையாண்டி என்ற நஞ்சிலே தோய்த்தெடுத்த கடுஞ்சொற்கள் என்ற அம்புகளை எத்தனை தரம்தான் எம் தலைவர் மீதும தோழர்கள் மீதும் இன்று நீங்கள் வீசினாலும், எவ்வளவுதான் அயலவர்போல் எம்மை எண்ணி நீங்கள் வெறுத்தாலும், உங்கள் மீது எமக்கெல்லாம் இருக்கும் பற்று—பாசம்—அன்பு—எம் வட்டாரத்தில் முன்பு விருதுடன் விளங்கிய வீரராயிற்றே நீர் என்ற நல்ல நினைவு எம் உள்ளத்தைவிட்டு சற்றேனும் மறையவில்லை. எனவேதான் நீங்கள் எம்மைத் தாக்கியபோதெல்லாம் திருப்பித் தாக்க எண்ணினோமில்லை—புன்சிரிப்புச் செய்தோம். நீங்கள் எம்மை நையாண்டி செய்தபோதெல்லாம் மறு நையாண்டி புரிய விழைந்தோமில்லை—உங்கள் நையாண்டியை நல்லெண்ணத்துடன் ஏற்றுக்கொண்டோம். சேலம் மாநாடு, பதவிப் பித்தரையும், மேட்டுக்குடி எத்தரையும், ஜமீன்—மிராஸ்—மிட்டா மேதைகளையும் திராவிடர் இயக்கத்திலிருந்து விரட்டியபோது நீங்கள் எம் பக்கம் இல்லை. அந்த சமுதாய விரோதிகள் பக்கமே நின்றீர். அவர்கள் அமைத்த பெரியார் எதிர்ப்பு முன்னணியிலே ஓடோடிச் சென்று கலந்து கொண்டீர். ஜஸ்டிஸ் கட்சியை பாட்டாளிகளின் இயக்கமாக நாங்கள் மாற்றியபோது, அது கூடாது என்று ஆர்ப்பரித்த கனதனவான்களுக்குத் துணைபுரிந்தீர், அத்தனைக்கும் நாங்கள் பொச்சரிப்புக் காட்டினோமில்லை. ஏதோ வழி தவறி நடக்கிறீர்—இன்று இல்லையேல் நாளை உண்மை நெறிக்கு வந்தே தீருவீர் என்ற எண்ணத்தால் இரக்க உணர்வு மட்டுமே காட்டினோம். திராவிடர் கழகத்தையும், அதன் தலைவரையும், திட்டத்தையும், கொள்கையையும், நடைமுறையையும், கிண்டல் செய்யவென்றே நீவிர் ஓர் தமிழர் கழகம் கண்டு, அதற்கோர் மந்திரி சபையும் கண்டு, ஒரு தமிழர் நாடு பத்திரிகையையும் கண்டபோதுங்கூட நாங்கள் உங்கள் போக்கைத் தாக்கினோமில்லை; அமைதியையே கட்டிக்காத்தோம். ஆனால் நீங்களோ ஒவ்வொரு வாரமும் தமிழர் நாடு இதழிலே எம்மைத் தாக்கும் பல நையாண்டிக் குறிப்புகளைப் பொறித்தே வந்தீர். வெறும் நையாண்டி மூலமே எம்மை அழித்துவிட முடியும் என்று பொய்க் கனவு கண்டீர். அந்தக் கனவை நினைவாக்க உற்ற தோழர்களாகிய எம்மை மறந்து, கூடாத தோழருடன் எல்லாம் கூடினீர். மதியாதார தலைவாசல் எல்லாம் மிதித்தீர். வேண்டாத உறவுகளை யெல்லாம் இணைத்திட எண்ணினீர். இன்றோ எண்ணினேன் ஏமாந்தேன் என்று வேதனை விருத்தம் வாசிக்கிறீர். கழகம் அமைத்தேன்—போற்றுவாரில்லையே என்று வாட்டம் தெரிவிக்கிறீர். கிளைச் சங்கம் இல்லையே! நிதி தருவார் இல்லையே! பத்திரிகை வளர இல்லையே! சந்தாதார் இல்லையே! தமிழ்மக்கட்கு உண்மை தெரிய இல்லையே! ஓராண்டு முழுவதும் ஓயாதுழைத்தேனே! உறுபயன் ஒரு சிறிதும் காணேனே! முயற்சி வெல்லவில்லையே! என்று "இல்லை—பதிகம்" பாடுகிறீர். வேறென்ன செய்வீர்! வேறென்ன செய்ய முடியும்?

நாற்பது ஆண்டுகளுக்கு முன்னே தமிழர் வாழ்க்கை என்ற பாலைவனத்திலே ஒரு
பழமுதிர் சோலை போ
தோன்றினார் பெரியார்.
றிலும் இன்பம் பாய்ச்சி
எங்கணும் தென்றல் வீ
செய்தார். எம் மருங்கும்
மான உணர்ச்சி அரும்பச் செ
நார். இதுவரை எவரு
நினைத்தறியாத புத்தம் பு
விஞ்ஞான முறைகளி
உழைத்து உழைத்து, அ
பாலைவனத்தையே ஒரு பூ
சோலையாக மாற்றியும் வ
றார். அந்த அரிய காட்சியை
கண்டு கண்டு தமிழரெல
வியக்கின்றனர். வாழ்க வா
—எம் வாழ்வை வளமுற
வந்த பெம்மான் நீ. வா
வாழ்க என வாழ்த்துகின்றன
நீங்களோ அவரை வீழ்
எண்ணினீர்கள். இறுதியி
நீங்களே வீழ்ச்சியுற்றீர்க
பெரியார் வாழ்ந்தால் தமிழ்
வீழாது; பெரியார் வீழ்ந்த
தமிழ்நாடு வாழாது எ

திராவிட வீரர்களே! வீராங்கனைகளே!

★

இது ஒரு சோதனைக் காலம்

★

இப்போது பெரியார் கூறும்

ஒவ்வொரு வார்த்தையும் ஒவ்வொரு கட்டளை.

இதை நெஞ்சில் நிறுத்துங்கள்.

★

எத்தகைய ஆபத்துக்கள் நேரிட்டாலும் சரி தலைவர் கட்டளைக்குக் கீழ்ப்படியுங்கள்

..டிப்படை உண்மையை காம ..ஜர்களும் உணரத் தொடங்கி ..ட்ட இந் நாளில் நீர் அதை ..ன்கு உணர்ந்திருந்தும் உணரா ..ர்போல நடித்தீர்; பிறரும் ..வ்வண்ணமே நடிக்கவேண்டும் ..ன விரும்பினீர். பெரியாரும் ..வர் இயக்கமும் இல்லாமலே ..ட தமிழகத்தை புது ..ாழ்க்கை எனும் வளத்தோட் ..த்திற்கு அழைத்துச் சென்று ..ட முடியும் என்று நம்பினீர்; ..றரும் நம்ப வேண்டும் என ..ரும்பினீர். அந்த நம்பிக்கை ..வறும் கானல் நீர்—அது ..கத்தைத் தீர்க்காது என்று ..னும் என் தோழரும் நீர் ..மிழர் கழகம் தோற்றியபோதே ..ச்சரித்தோம். நீர் கேட்க ..ல்லை. இன்றோ உணர்கிறீர், ..வதனைப்படுகிறீர்.

இன்றுங்கூட, "நான் வழி ..ப்பிப் போனேன்; தமிழர்களை ..ம், என் தவருன பாதை ..ழியே வம்மின் வம்மின் என ..ழைத்தேன்—அது பிழை; ..கவே தோற்றேன்" எனக் ..றினீரில்லை "தமிழ் மக்கட்கு ..ன் வழி காட்டினேன். அந்த ..ழி புக அவர்கள் வரவில்லை, ..கவே நான் தோற்றேன்" ..ன்கிறீர். ஏனோ இப் போக்கு ..ன்னும்? நெருப்பு சுடும் ..ன்று கூறினோம் கேட்கவில்லை. ..ருப்பிலே விரல் இட்டீர். ..து சுட்டது. சுட்ட பின்ன ..ம் அது என் குற்றமல்ல— ..ருப்பின் குற்றம் என்கிறீர். ..து தம் அனைய நேர்மையாளர் ..றக்கூடிய வாசகம் அல்லவே!

..கடலிலே முத்திருக்கும். மலை ..லே அகில் இருக்கும். ..ளைந்த வயலிலே நெற்பயிர் ..ருக்கும். முல்லைக் காட்டிலே ..லர் இருக்கும். இதுவே ..யற்கை. இந்த இயற்கையை ..ணர்ந்ததால் நாங்கள் ஆழ் கட லிலே மூழ்கி முத்தெடுத்தோம்; மலைப்புனத்திலே சென்று அகில் குவித்தோம்; வயல் வெளி களிலே புகுந்து நெல் மணி கொழித்தோம்; முல்லைக் காட் டிலே நுழைந்து மலர் பறித் தோம். எது எது எங்கெங்கு உண்டோ அங்கங்கு சென்று அது அதைத் திரட்டினோம். நீவிரோ கடலிலே புகுந்து முல்லை மலர் தேடினீர். முல் லைக் காட்டிலே நுழைந்து முத் துத் தேடினீர். வயற் புறத் திலே புகுந்து அகில் தேடினீர். மலைக் காட்டிலே புகுந்து நெற் பயிர் தேடினீர். இது வீண் முயற்சி பயன் படாதென்று நாங்கள் உங்களை நோக்கிக் கூவி னோம்—பழைய நேசம் காரண மாக. நீங்கள் எம் சொல் கேட்க வில்லை. எம்மை நையாண்டி செய்தீர். "கடலிலே முத் திருக்குமாமே! என்ன பித்தர்க ளப்பா இவர்கள். அந்த ஈ. வெ. ரா. பேச்சைக் கேட்டு இப்படிக் கெட்டலைகிறார்களே எத்தர்கள்!" என்று பேசினீர்— எழுதினீர். "தமிழர்களே! பெரியார் பேச்சைக் கேளாதீர்— கடலிலே முத்திராது. திரா விடர் இயக்கத்தால் நலன் விளையாது" என்று முத்தமிழ் முழக்கினீர். மூவேந்தர் கொடி மூன்றும் கரத்தேந்தி மும் முரசு கொட்டிக் கூறினீர். ஒரு நாள் இரு நாளா ஓராண்டு முற்றும் கூறினீர். ஊர் ஊராய்ச் சென்று சென்று கூறினீர். கிழமைதோறும் இதழ் எழுதி எழுதிக் கூறினீர் என்றாலும் தமிழர் செவியிலே நும் சத்தம் புகவில்லை. அவர்கள் கடலிலே தான் முத்து கிடைக்கும்— மலைப்புறத்திலே அல்ல என்று கூறிவிட்டனர். "நான் தோற் றேன்—தமிழர் என்கூற்றை ஒப்பவில்லை" என்பதை இன்று கூறுகிறீர் துணிந்து. ஆனல் தோல்விக்குக் காரணம் உங்கள் சொல்லில் உள்ள பிழை என் பதை உணராமல் தமிழர் செவி யில் உள்ள மந்தமே காரணம் என்று நவில்கிறீர். தமிழர் குலத்தின்மீது ஏன் இந்த அடாத பழி சுமத்துகிறீர்?

திராவிடர் கழகம் கொடுக்கும் மருந்து கசப்புதான். ஆனல் அதுதான் திராவிடத்தின் நோய் தீர்க்கும் திறம் வாய்ந்தது. நீங் கள் அதன் கசப்பை மட்டுமே கண்டீர்கள். கசப்பு கசப்பு எனக் கூக்குரல் எழுப்பினீர் கள். அந்தக் கூக்குரலை நையாண்டி என்றும் எண்ணி னீர்கள். ஏமாந்தீர்கள். இன்றோ பிறர் நையாண்டிக்கு

(10-ம் பக்கம் பார்க்க)

திராவிடர் கருஞ்சட்டை அணிந்ததற்குக் காரணம் தம் இன இழிவு நீங்க வில்லை என்ற துக்கத்தையும் வெட்கத்தையும் அறிவிக்க.

★

இன்று சர்க்கார் கருஞ் சட்டை அணிய வேண்டாம் என்கின்றனர். அப்படியாயின் திரா விடர்தம் இழிவு நீங்கி விட்டது என்று சர்க்கார் கருதுகின்றனரா?

போர்வாள்

6—3—48 சனிக்கிழமை

அமைதிக்குப் பரிசு!

வளமார் எமது திராவிட நாடு
ாழ்க வாழ்கவே என்று பண்
ாடி வந்த தமிழ் வீரர் கூட்டத்
ன்மீது அடக்குமுறை பாணம்
தாடுக்கப்பட்டு விட்டது.

இன்பத் திராவிடம் எம் பிறப்
ரிமை என்று முழங்கிவந்த பச்
சப் பசுங் கிள்ளைகள் உடலம்
ன்னை கூரிய ஈட்டி முனை ருசி
ார்க்கத் தொடங்கிவிட்டது.

பார்க்கும் திசையெங்கும்
க்கமா நிறைந்து நின்ற பகைப்
லத்தவர் தம்மோடு அஞ்சாத
நெஞ்சுடனே தன்னந் தனியே
நின்று அறப்போர் ஆற்றி வந்த
ஆணழகர் மார்பில் எல்லாம்,
ஆயுதங்கள் பற்பலவும் தத்தம்
திறம் காட்ட முனைந்து விட்டன.

ஒரு புறம் வடநாட்டு வேழ
மும், ஒரு புறம் பார்ப்பனீயக்
குள்ளநரிக் கூட்டமும், ஒரு
புறம் மார்வாடி குஜராத்தி
மலைப்பாம்புகளும், மற்றோர்
புறம் தவறிய தமிழர் எனும்
சிறுத்தைகளின் சிடுசிடுப்பும்,
இன்னோர் புறம் சொந்த இனத்
துதித்தாலும் இன உயர்வுதனை
மறந்த குடிலர்கள்—குவிஸ்
லிங்குகள் — விபீடணர்கள் —
சுக்ரீவர்கள் — மெலீடஸ்கள்—

இன்ன பிறர் ஏச்சுக்களும் எத்
துக்களும் தமைத் தாக்கினாலும்,
உள்ளம் தளராது, ஒரு கணமும்
ஓயாது, எவ்வெவர் தீமையும்
பாராது, எட்டுத் திசையெங்கும்
இருந்தெழும்பும் எதிர்ப்பு
கண்டு சளைக்காது, எத்தகைய
உறுமல் கண்டும் மலைக்காது
ஆண்டு பலவாகப் போராடி வந்த
திராவிடர் பட்டாளத்தின்மீது
பீரங்கி வேட்டு எழுந்துவிட்டது.

சூழ இருந்த ஆரியக் காட்
டினை மடமடவென முறித்துத்
தள்ளிவந்த திராவிட வேங்கை
மீது வேல் பாய்ந்துவிட்டது.

பனங்காட்டு நரிகளின் பொரு
ளற்ற சலசலப்புக்கு ஒரு பொ
ருள்கூடகற்பிக்கப்பட்டுவிட்டது.

சென்ற ஒரு மாத காலமாக
எதை எண்ணி எண்ணி தென்
னாட்டுப் பார்ப்பனீயம் தவங்
கிடந்து தவித்ததோ, அது, அதற்
குக் கிடைத்துவிட்டது.

ஆதிக்க வாதிகளின் சூழ்ச்சி
—கிழிந்த பழம் பஞ்சாங்கங்க
ளின் கதகதப்பு—செத்து மடி
கின்ற செம்மறியாடுகளின் நெட்
டுயிர்ப்பு—" அந்த சிறு வட்டா
ரத்தின் " கெடுநினைப்பு வெற்றி
பெற்றுவிட்டது.

ஆம்! ஏழை என்று
அடிமை என்றும் எவனு
இல்லை பனித சாதியில் என்
முழங்கிவந்த முத்தமிழ் இ
கம்—திராவிட இயக்கம்
கருஞ் சட்டை இயக்கம் கு
செய்யப்பட்டுவிட்டது.

எந்த இயக்கம் வீண
வீழ்த்தி, விபரீத வாதிகளை
சாய்த்து, பத்தாம் பசலிக
மாய்த்து, பகுத்தறிவுப் ப
பாட்டை நிலைநாட்டி வந்த
—எந்த இயக்கம் மூட நம்
கைக் கோட்டைகளில் வ
ஞான வேட்டுகளை வரிசை
சையாக எழுப்பி வந்ததோ
எந்த இயக்கம் பெர்னாட்ஷா
ளும், பெர்ட்ரண்டு ரசல்க
எச். ஜி. வெல்சுகளும் வே
நாட்டில் செய்துவந்த புரட்
பிரசாரத்தை இந்த நாட்
புரிந்துவந்ததோ—எந்த இ
கம் சாதியின் பேராலும்,
சமயத்தின் பேராலும்,
பேதத்தின் பேராலும், சாஸ்
சம்பிரதாயத்தின் பேரா
பல நூறு குலங்களின் பே
லும், அவற்றைக் கற்பி
வளர்த்துவந்த வேத புரா
இதிகாசங்களின் பேரா
பரம்பரை பரம்பரையாக மக்
மன்றத்தில் உலவிவந்த மட
நிரம்பிய மாபெரும் கோட்
களை அறிவெனும் கோ
கொண்டு வெட்டி வீழ்த்திற்
—எந்த இயக்கம் சிந்தனைத
முதல் தேவை, பகுத்தறிவுத
உரையாணி, ஆராய்ச்சிதான்
துலாக்கோல், அநுபவம்த
நல் வேதம், சீர்திருத்தம்த
நாட்டுத் தொண்டு என்று
ளத் தெளிய தீரவுரை பகர்
வந்ததோ — எந்த இயக்
தென்னாட்டை பழமைப் பி
லிருந்து மீட்டு, புத்துலக
ணங்களை அதற்களித்து, பு
சிப் பாதையில் அதை இழுத்
சென்றதோ அதே இயக்

ன்று தடை செய்யப்பட்டு
டை விட்டது.

கருஞ்சட்டைப் படை, படை
ன்ற பெயரிலே உலவி வந்தது
ன்றலும், அது, ஒரு படை
ல்ல; அது ஒரு அமைப்பு
ல்ல; அது ஒரு கட்டுக் கோப்
ன பொருள் அல்ல—அஃது
இயக்கம்; உளுத்துப்போன
ழய சமுதாயம் எனும் சிறை
லே உலவும் மக்கட் கூட்டத்
த புது உலகம் எனும் வெட்ட
வளிக்கு இழுத்துச் செல்லும்
த்தான சக்தி.

உலகிலே உள்ள சட்டைகள்
ரு முறை தைக்கப் பட்டுவிட்
ல் பின்பு வளராது. ஆனால்
ருஞ்சட்டை வளரும்; தினம்
னம் வளரும்; விநாடிக்கு
நாடி வளரும். ஆச்சரியம்
னால் உண்மை! ஆனால் உண்
மையை உணர்ந்தவர்க்கு ஆச்சரி
ம் கூட இராது.

கருஞ் சட்டை என்றால் புர
சி என்றுதானே பொருள்! பகு
றிவு என்று தானே பொருள்!
திருத்தம் அல்லது முற்
க்கு அல்லது வைதீகத்தை
த்தும் புத்தம் புதிய சக்தி
று தானே பொருள்! அங்
ம் ஆயின் கருஞ் சட்டை
ர்வதிலே வியப்பென்ன
ருக்கிறது?

கருஞ் சட்டை ஓர் வளரும்
லக்கியம். உலகிலே முதலா
த்துவம் மாய்ந்து போகும்வரை,
ராகிதத்துவம் தொலையும்
ர, மத அடிமைத் தனம்
ஒழிந்தொழியும் வரை, ஏகாதி
திய எண்ணங்கள் இடுப்
டிந்து போகும் வரை,
மேல்—கீழ்'' தத்துவங்கள்
நாறும் வரை அந்த
லக்கியம் வளரும். பொது
மைக் கொள்கை திசை எட்
பவனி செல்லும் வரை,
தாயத்தைச் செல்லரிக்கும்

அரசியல், பொருள் இயல், மத இயல், கலை இயல், வாழ்வில் கரையான்கள் அத்தனையும் கருகித் தீய்ந்து மண்ணுடன் மண்ணாக இரண்டறக் கலந்து போகும் வரை அந்த இலக்கியம் வளரும். மனிதன் மனிதனாக வாழும நிலை பிறக்கும் வரை——எல்லார்க்கும் எல்லாமும் இருப்பதான இடம் நோக்கி இந்த வையம் செல்லும் வரை—வடவர் சுரண்டலும் ஆரியா சூழ்ச்சியும் பணக்குண்டுகளின் படபடப்பும் தீரும் வரை அது வளரும். உலகிலே ஒரு துளி அடிமைத்தனமேனும் உலவும் வரையிலே அது மாயாது; மடியாது; மறையாது. அதன் வளர்ச்சியும் குன்றாது; குறையாது; எவ்விதத்தும் தடைபடாது.

பிராமணீயம்—இந்த நாட்டு பிற்போக்கு சக்தி—தென் இந்திய ரஸ்புட்டீனிசம்—கருஞ்சட்டைப் படையைத் தடைசெய்ய வேண்டும் என்ற நம் எண்ணம் நிறைவேறி விட்டதே என்று களிக்கலாம்; கூவலாம்; கூத்தாடலாம்; ஆநந்தப் பள்ளு பாடலாம்; ஆரவாரம் புரியலாம்; காந்தியார் மறைவின்போது புரிந்த ஈனத்தனம்போல இன்றும் மிட்டாய் வழங்கலாம்; சீனி வழங்கலாம்; இனிப்புப் பொருள் எத்தனை உண்டோ புவிமீதில் அவை அத்தனையும் வழங்கலாம்.

வழங்கட்டுமே! அதனால் என்ன? பகுத்தறிவு வளராதோ? புரட்சிக் கருத்து பரவாதோ? சோஷலிசம் ஓங்காதோ? சுயமரியாதைச் சுடரொளி விளக்கம் செய்யாதோ? எது தடைப்பட்டுவிடும் ஆரிய இனத்தவர் ஆர்ப்பாட்டத்தால்?.........

அதுபற்றிய கவலை நமக்கில்லை. ஆனால் ஓமாந்தூர் ஆட்சியினர் ஆரிய வட்டாரத்தின் சலசலப்பை ஏற்றுக்கொண்டு கருஞ்சட்டை இயக்கத்தின்மீது தடை விதித்தனரே, திராவிடர்களை மீது வேல் பாய்ச்சினரே, அது ஏன் என்பது தான் நமக்குத் தெரியவேண்டும். கருஞ்சட்டை இயக்கம் என்றேனும் பலாத்காரத்தை விரும்பிற்று—கிடையாது! அமைதியைக் குலைத்ததுண்டா — இல்லை! நாதுராம் விநாயக் கோட்சேக்கும் அதற்கும் தொடர்புண்டா — கோட்சேக்களின் பரம வைரி அது! மதவெறியை அது எப்போதாவது வளர்த்ததுண்டா?-மதமெனும் பேய் பிடியாத ஓரே ஒரு இந்திய இயக்கம் அது. சாதி பேதத்தை அது போற்றியதா—துளியும் இல்லை. சாதி பேதம் அற்ற சமுதாயம் அதன் இலட்சியம். உத்தமர் காந்தியார் கொலைக்கும் அதற்கும் எள்ளளவு தொடர்பேனும் இருக்க இடம் உண்டா? இல்லை! பின் ஏன் இந்த தாக்குதல்?

பிறர் தம்மைத் தாக்கியபோது கூட கருஞ்சட்டையினர் திருப்பித் தாக்கியதில்லை. மதுரை, கரூர், சேலம், அண்ணாமலை நகர், வண்ணாரப் பேட்டை— இந் நிகழ்ச்சிகளை நினைத்தாலே நெஞ்சம் நடுங்கும். அங்கெல்லாம் கருஞ் சட்டை இயக்கத்தவர் சொத்து சூறையாடப் பட்டது; பொருள் பறிபோயிற்று; உயிர் குடிக்கப் பட்டது; கண்கள் கல்லியெறியப் பட்டன. கால்கள் துண்டிக்கப் பட்டன. கரங்கள் கொய்து எறியப் பட்டன. அத்தனைக்கும் பதிலுக்குப் பதில் என்று அவர்கள் துவங்கியிருந்தால் தென்னாடு ஒரு நவாகலியாக மாறி இருக்கும். ஆனால் புரட்சி வீரர் பெரியார் என்ன நேரிடினும்

(9-ம் பக்கம் பார்க்க)

ஈ. வெ. ரா. உள்ளம் ஒரு சிந்தனை நிலையம்

அநுபவத்தின் பிழிவு அவருடைய பேச்சு

அதனைத் தடுப்பது அறிவீனர் செயலே!

அகில தமிழர் மாநாட்டில் விஞ்ஞானி நாயுடு ஆற்றிய விரிவுரையின் இறுதிப் பகுதி இது. இதில் பெரியரைக் காயும் பேதையர்க்குச் சரியான சாட்டையடி தருகிறார் நண்பர் நாயுடு.

"தமிழரென்போர் பித்தலாட்டக் கருங்காலிகளே" எனவும் "தமிழரசு என்று பேசுவது—ஒன்று அறியாமையாக இருக்கவேண்டும் அல்லது பித்தலாட்டமாக இருக்க வேண்டும்" எனவும் பெரியார் ஈ. வே. ரா. சமீபத்தில் தமது சொற்பொழிவில் குறிப்பிட்டதாக தமிழ்ப் பத்திரிகையில் கண்டேன். ஒரு தமிழ் வார வெளியீடு பெரியார் அவர்களின் கருத்துரையைக் கண்டித்து, அவர் அதை வாபஸ் பெற வேண்டுமென்று எழுதுகிறது.

எந்தக் கருத்தில் எந்த நிலையில் எதை உத்தேசித்துப் பெரியார் அதுமாதிரி சொன்னாரோ எனக்குத் தெரியாது. ஒரு விதத்தில் அவர் சொன்னதும் உண்மையே. இன்றைய தமிழர்கள் உண்மையான தமிழ்ப் பழக்கவழக்கங்களையும், சீலமான உயர்ந்த தமிழ்ப் பண்பாட்டையும் போலி பழக்க வழக்கங்களிலிருந்தும், பொய்யான கட்டுக்கதைகளிலிருந்தும் பிரித்து வாழ இயலாதிருக்கின்றனர்.

நாம் எங்குப் போனாலும், வேண்டியதும் வேண்டாததுமான பல வித சாமான்கள் கூளமாக இருப்பதிலிருந்து நமக்கு வேண்டியனவற்றை நாம் பொறுக்கியெடுத்துக் கொள்ள வேண்டியது முறை. உதாரணமாக நமக்குப் பென்சில் வேண்டியிருக்கிறது என்று வைத்துக்கொள்வோம். மை, ரப்பர், காகிதம், எழுதுகோல், கொட்டைகள் மற்றும் இதர சாமான்கள் உள்ள ஒரு கடைக்குப் போனால், அங்கு ஒன்றிரண்டு விஷபதார்த்தங்களையும் காண்கிறோம் என்று வைத்துக் கொள்வோம். விஷபதார்த்தங்களைத்தவிர, மற்ற எல்லா சாமான்களுமே பொதுவாக நாம் உபயோகிக்கத் தகுந்தவை. ஆனால் அந்த நேரத்தில் நமக்கு வேண்டிய பொருள் பென்சில் ஆக இருப்பதால் அதை எடுத்துக்கொள்வோம். முழு மூச்சாக நச்சுப் பொருள்களை ஒதுக்கித் தள்ளிவிடுவோம். அதேபோல் பெரியாருடைய அறிவு, சித்தாந்தம், அநுபவம் என்ற களஞ்சியத்திலிருந்து வரும் பொன்மொழிகள், கருத்துரைகள், கோட்பாடுகள் புத்திமதிகள் ஆகியவற்றைப் பெரியார் தாராளமாக வெளியிடட்டும். நமக்கு வேண்டியவற்றை அவைகளிலிருந்து பொறுக்கியெடுத்துக் கொள்வோம். அவருடைய ஆயிரக்கணக்கான அநுபவ சித்தாந்தங்களை பெரியார் வெள்ளம்போல் பிரயோகிக்கும் போது, அவருடைய கருத்துரைகள் ஒன்றிரண்டு நமக்குப் பிடிக்காத காரணத்தால் அவரை நாம் ஏன் கண்டிக்கவேண்டும்? இதே ரீதியில்—அதாவது ஒரு தமிழ் வாரப் பத்திரிகை கண்டிக்கப் புகுந்த முறையில்—பெரியாருடைய ஏதோ ஒரு சில கருத்துரைகளைக் கண்டித்து எழுதுவதும், பேசுவதுமாகக் காலங்கடத்துவீர்களானால், நம்முடைய இளைஞர்கள் தான் நஷ்டமடைந்தவர்களாவார்கள்; பெரியார் அவர்களுடைய அநுபவ சித்தாந்தங்களை அறிவதற்கான வாய்ப்பு அவர்களுக்கு இல்லாமலே போய்விடும்.

இந்த மகாநாடு தமிழர் மகாநாடு என்று சொல்லப்படுகின்றதானாலும், நான் இதனை, ஆந்திரர்கள், மைசூர்க்காரர்கள், கர்நாடகர்கள், திருவாங்கூர்க்காரர்கள், கேரளர், கொச்சி பிரஜைகள் மகாநாடுகளிலிருந்து தனித்துப்பிரித்து வித்தியாசம் கற்பிக்கவில்லை. பம்பாய் — ஒரிசாவிற்குத் தெற்கே உள்ள நிலப்பரப்பு ஒரு தனி மத்திய சர்க்காரை அமைக்க மிகவும் பொருத்தமுடையதே. நாட்டு எல்லை மக்கள் தொகை, தட்பவெப்ப நிலை, மொழி, பழக்க வழக்கங்கள் ஆகிய பல துறைகளிலும் அது தனி நாடு ஆவதற்குப் பொரு[...]முடையதாகவே இருக்கிறது.

ஆகவே, வட இந்தியாவிலிரு[...]
தென் இந்தியாவைப் பிரி[...]
வேண்டுவதற்கான வழி துறை[...]
வகுக்கவும், தென் இந்தியாவிற்[...]
தனி மத்திய சர்க்கார் ஏற்படு[...]
வதற்கான முறைகளைக் கோல[...]
கூட்டப்பட்ட மகாநாடே இம்[...]
நாடு என்று கொள்ளவேண்[...]
சென்னை மாகாணம், அல்[...]
பெரியார் சொல்வதுபோல [...]
விடநாடு என்ற இந்தப் பகுதி [...]
திர, தமிழ், கேரள, கர்நா[...]
மாகாணங்களாகவோ, அல்[...]
இன்றிருப்பது போன்ற ஒரே ம[...]
ணமாக, ஆனால் விடுதலை பெ[...]
மாகாணமாகவோ இருக்கல[...]
ஆனால் எக்காரணத்தைக் கொ[...]
டும் வட இந்திய சர்க்காரின்
மேலும் நீடித்திருக்கக்கூடாது.

நான் எனது பேச்சை முடி[...]
உங்களிடமிருந்து விடை பெற்[...]

ஆரியமே!

உன் எண்ணம்
நிறைவேறிவிட்டது

கருஞ் சட்டை இயக்க[ம்]
சட்ட விரோதம்
ஆக்கப்பட்டுவிட்டது

ஆனால் இதன் பொருள் என்ன தெரியுமா?

உன் முடிவு காலம் ஒத்தி[...]
போடப்பட்டுவிட்டது என்[...]
தல்ல. அது மிக மி[...]
நெருங்கி விட்டது என்ப[...]
தான்.

ன்று முன் தென் இந்தியாவி ந்து வடஇந்திய மத்திய சர்க ருக்குப் போகும் பணம் எவ்வ என்பதையும், அந்த மத்திய க்காரிடமிருந்து நமக்குப் பதி க்கு எவ்வளவு கிடைக்கிறதென் தயும் பற்றி சில புள்ளி விவரங் கூற விரும்புகிறேன்.

1945—46 ம் ஆண்டில், சென்னை லிருந்து மத்திய சர்க்காருக்கு 30 டி ரூபாய்கள் போய்ச் சேர்ந் ன.

சுங்கம்	ரூ. 8,55	லட்சம்
மத்திய கலால்	,, 6,43	,,
கம்பனி வரி	,, 7,53	,,

கம்பனி வரி அல்லாத வருமான வரி, மத்திய சர்சாஜ் 5,67 லட்சம்
உப்பு வரி 2,16 லட்சம்
வட்டி, துறைமுகங்கள் வானூர்தி கட்டணங்கள் 7, லட்சம்
லைட் ஹவுஸ்கள், விமானங்கள், சிறு கப்பல்கள் வரி 2, லட்சம்
வானொலி, சில்லறை இலாகாக்கள் 9, லட்சம்
நாணயமும் பிற சில்லறை இனங்களும் 3, லட்சம்
இவைகள் அல்லாமல் சென்னையில் விளைந்து மற்ற மாகாணங்களுக்கு அனுப்பப்பட்டு அந்த மாகாணங்களால் பகிர்ந்து கொள்ளப்படும் சிகரெட் புகையிலை வரி மூலம் ரூ. 8 கோடி.

இவ் வண்ணம் சென்னை மாகாணம் மத்திய சர்க்காருக்குக் கொடுக்கும் இந்த 38 கோடியில் மத்திய சர்க்காரிடமிருந்து, சென்னை மாகாணத்திற்கு திரும்பக் கிடைத்தது மொத்தம் 66 லட்சம் அதாவது ஒரு கோடிக்கும் குறைவு.

ஆக நாம் ஆண்டுதோறும் வட இந்தியாவுக்கு 38 கோடி ரூபாய் கொடுத்துவிட்டு 66 லட்சம் பெறுகிறோம். இவ்வளவு பெரிய உபகாரத்திற்கு வடஇந்தியா நமக்குச் செய்யும் கைம்மாறு என்ன தெரியுமா, மேலிடத்து அதிகாரத்துக்குக் கீழ்ப்படிந்து நடக்கும்படி கட்டளை பிறப்பிக்கப்படுகிறோமே, வடக்கத்தியாரால் எப்பொழுதும் அடிமைகளாக நாம் வைக்கப்பட்டிருக்கிறோமே, அதுதான்.

தென் இந்தியா, ஒரு உண்மையான, தூய்மையான, சமதர்ம சோஷியலிச தென்னிந்தியாவாக மாறவேண்டுமானால், வடஇந்தியாவிலிருந்து அது விடுதலைபெறவேண்டும். அந்த நிலை ஏற்பாடுமானால்—அதாவது தென் இந்தியா சமதர்ம நாடாகத் திகழுமானால்—நமது பிரதம மந்திரி பண்டிதர் நேரு, அவர் சோஷியலிசத்தை சரியான முறையில் அறிந்தும் உணர்ந்தும் இருக்கின்ற ஞானியாக இருப்பதால், அவருடைய சமதர்மக் கொள்கை நடை முறையில் இருப்பதைக் கண்டு மகிழ்ச்சியின் எல்லையை அடைந்தவராவார்.

தென் இந்தியா சமதர்ம நாடாகி விடுமானால், பிறகு உண்மையான சமதர்மிகளாக விளங்கும் பண்டித நேருவும் மற்றவர்களும் நம்மைப் பின்பற்றி வட இந்தியாவையும் ஒரு சோஷலிச தேசமாக மாற்றியமைக்க முடியும். ஆனால் தென் இந்தியப் பிரிவினைக்கு முன்னதாக, இந்தியாவின் எந்தப் பகுதியிலும், சமதர்ம தத்துவத்தின் நிழலைக்கூட காணுதல் முடியாது. மாறாக தந்நலக்கும்பல்கள் ஆக்கம் பெறுவதையும் முதலாளித்துவம் ஓங்கி வளர்வதையும் தான் நாம் பார்க்கக் கூடும்.

ஆகையினால் தோழர்களே! தென் இந்தியப் பிரிவினை இன்றியமையாதது; அவசரமானது. அதைத் தொடர்ந்து ஆந்திர, தமிழ, கேரள கர்னடக மாகாண அமைப்புகள் ஏற்படலாம்.

நாம் யாவரும் ஒன்றுபடுவோமாக! தென் இந்தியாவிற்குத் தனி சுதந்திர சர்க்காரைப் பெறுவோமாக!!

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

மதி அமைதி என்று ஆணையிட் ர், தம் தலைவர் ஆணைகாத்த ர் திராவிடர். குண்டர் கூட் ம் நம்மைத் தாக்கவும், சர்க் ர் பார்த்துச் சும்மா இருக்கவு ன நிலை பிறந்த பின்னருமா ம் வாளா கிடப்பது என்ற ண்ணம் எழுந்தபோது திராவி ர் தம் தோள்கள் துடித்தன; கள் தினவெடுத்தன; நரம்பு ர் புடைத்தன; குருதி காதித்தது; கண்கள் கனல் கின; உள்ளம் குமுறிற்று. லும் தம் தலைவர் தாக்கினை ண்ணி அமைதியே போற்றி ர், கொதித்தெழுந்த தம் ள்ளத்தின் துடுக்கடக்கிவிட்டு, வ்வண்ணம், அவர்கள் கட்டிக் த்த அமைதிக்குப் பரிசுபோல ருகிறது இன்றைய தடை உத் வு.

இந்த அவசரச் செயலின் பருந்தவறை உணர்ந்து அரசிய ர், உடனே தம் தடை உத்தர வத் திருப்பிப் பெறவேண்டும். ல்லையேல், "அமைதியைக் ப்பவர்க்குத் தண்டனையும் அத க் குலைப்பவர்க்குப் பரிசும்தான் ண்டுபோலும் இன்றைய ஆட்சி " என்று மக்கள் எண்ண ம் ஏற்பட்டுவிடும். அந்த ண்ணத்தை வளரவிடுவது சரி ல.

(11-ம் பக்கத் தொடர்ச்சி)

திடீரென்று புயல் வீசத் தொடங்கியது! புலி சீறுவதைப் போல, புயல் சீறிச்சீறி வீசியது! மரங்கள் வேரற்றுத் தரையில் சாய்ந்தன.

காதலர்கள் இவற்றையெல்லாம் பொருட் படுத்தவே யில்லை! வெளியில் பயங்கரமான புயல் வீசிக் கொண்டிருந்தது, ஆனால் அவர்களின் காதல் உள்ளங்களில் இன்பத் தென்றல் வீசிக் கொண்டிருந்தது!

புயல் அந்நேரத்தில் அவர்களின் இன்பத்தை அதிகப் படுத்திற்றே அன்றி சிறிதும் கவலையையோ, அச்சத்தையோ உண்டாக்கவில்லை. பயமறியாத பருவம்! கவலை நெருங்க முடியாத நேரம்! எனவே அவர்கள் உள்ளத்தில் அச்சம் ஏன் உண்டாகப் போகிறது?

உலகத்தில் அப்போது புயல் வீசிக் கொண்டிருந்தது. ஆனால் எப்போதுமே புயல் வீசிக்கொண்டிருக்கும் என்பதில்லை. மந்தமாருதத் தென்றல் மெள்ளப் பாடி அசைந்து வரும் காலமும் உண்டு. சீறும் புயலும் சிரிக்கும் தென்றலும் மாறி மாறி வரும் உலகில். இது சகஜம். ஆனால் உள்ளம்...?

உள்ளம் மட்டுமென்ன...அங்கு எப்போதுமே தென்றல் வீசும் என்பது என்ன நிச்சயம்? உள்ளம் என்றாலே ஒரு குட்டி உலகம் என்று தானே பொருள்?

(தொடரும்)

(5-ம் பக்கம் தொடர்ச்சி)

ஆளானீர்கள். இனியேனும் இத்தகைய பரிதாப நிலையில் உங்களை நீங்களே இழுத்துச் செல்லும் இந்தக் கோலம் புரியாதீர்கள்; புரியாதீர்கள். பழைய பாசத்தால் கட்டுண்டயான் மன்றாடிக் கேட்டுக்கொள்கிறேன், இனி இத்தகைய விபரீதங்களை மறந்தும் புரியாதீர்கள். 1944 ஆகஸ்டில் சேலத்தில் கூடிய அந்தப் பாசறைக் கூட்டத்தில் நீங்கள்தானே சங்கீதக் குரலில் அழகுபடக் கூறினீர்கள், "திராவிட நாட்டுப் பிரிவினையை விரும்பாதவர்கள் யார் இருக்க முடியும் என்றுதான் சொல்ல முடியும்—வேறென்ன சொல்ல முடியும்?'' என்று. அதே வாசகத்தைத்தான் இன்று திராவிட இளைஞர் உலகம் தன் இலட்சிய கீதமாக அமைத்துக் கொண்டுவிட்டது. இந்த நாட்டு வாலிப உள்ளமும் அந்தக் கீதமும் வீணையும் நாதமுமென இணைந்து விட்டன. உமது அரசியல் பயணம் எனும் சிறு கத்தி கொண்டு வெட்டிப் பிரிக்க முனையாதீர்—அந்த வீணையை, நாதத்தினை.

நான் உங்களை இத்துணை தாழ்ந்து பணிந்து வேண்டுகிறேன் என்றால் அதற்குக் காரணம் உங்கள் சிறு கத்தி அந்த வீணையை நாதத்தை வெட்டிப் பிரித்துவிடும் என்ற பயத்தால் அல்ல—அதற்கு அந்த ஆற்றல் கிடையாது என்பதை நான் நன்கறிவேன்—நீங்கள் அப்படிச் செய்வதன் மூலம் தமிழர்தம் பொச்சரிப்புக்கு ஆளாகிறீர்களே, ஒரு மாஜி சுயமரியாதை வீரருக்கு இது நேரிடக்கூடாதே என்ற கவலையால்தான். கடைசியாக ஒரே ஒரு வார்த்தை:

"தமிழர் கழகத்தைத் தொடர்ந்து நடத்த தமிழ் நாட்டுத் தமிழர் கழக உறுப்பினர்கள் எவர் விரும்பினாலும் அதன் எல்லா ஆதரவுகளுடனும் கையிருப்புடனும் ஒப்புவிக்கத் தயாராயிருக்கிறேன். "தமிழர் நாடு'' பத்திரிகையையும் மார்ச் 31ந் தேதிக்குப் பிறகு தொடர்ந்து நடத்த அதன் கொள்கையில் அழியாத நம்பிக்கையுள்ள எவர் விரும்பினாலும் கொடுக்கக் காத்திருக்கிறேன்''

—என்று எழுதி இருக்கிறீர்களே! அப்படியானால் அதன் பிறகு என்ன செய்வதாக உத்தேசம்? தங்கள் இதழ்களைத் தொடர்ந்து படித்துவந்ததால் எனக்கு ஒரு யோசனை தோன்றுகிறது. பாம்புக் கடிக்கு மருந்து, நட்டுவக்காலிக் கடிக்கு மருந்து, தேள் கடி வைத்தியம்,
வாழைப் பட்டையின் மக
வம், பொன்னாங்காணிக் க
யின் இயல்பு இப்படிப்ப
மருத்துவக் குறிப்புக
கொண்ட பெரிய புத்த
ஒன்று நீங்கள் எழுதலா
அது தமிழ் நாட்டுக்கும் மிக
பயன்படுமே! எண்ணிப் பா
கள்.

இங்ஙனம்,
தங்கள் பழைய தோழ
நூறுமாறு

குறிப்பு: தங்கள் தலைப்
திற்கு **என் நோக்கில்** என்ற
டம் சூட்டியதைவிட, க
விரித்தேன்; கோல்வார் இ
கட்டிவிட்டேன் என்ற அரு
வாக்கியத்தைப் பொறித்திரு
லாமே என்கிறான் என் த
குறும்புக்காரன் அவன்!

திராவிடஸ்தான் வேண்டாமா?

வேண்டாம் என்கிறார் கம்யூனிஸ்ட் நண்பர். அதற்குத் தக்க மறுப்புரை வழங்குகிறார் மா. இளஞ்செழியன். இருவருக்கும் இடையே நிகழ்ந்த எழுத்துப் போர் இப் புத்தகம்.

விலை அணா 8
தபாலில் அணா 9

ஈரோட்டுப் பாதை

தீட்டியவர்: மா. இளஞ்செழியன் B. A. (Hons)

அலைகடலென எழுந்த எதிர்ப்புக்கிடையே சுயமரியாதை இயக்கம் மடமடவென வளர்ந்த விதத்தைச் சுவைபடக் கூறுகிறது "ஈரோட்டுப் பாதை."

விலை அணா 8
தபாலில் அணா 9

ஒரு ரூபாய் அனுப்புவோர்க்கு இரண்டு புத்தகங்களும் தபால் செலவின்றி அனுப்பப்படும்.

பகுத்தறிவுப் பாசறை

147, பவழக்காரத் தெரு, சென்னை 1.

(12-ம் பக்கத் தொடர்ச்சி)

கண்களைச் சாய்த்துப் பார்த்து, தான் விடுங்கள் என்ருல் விட்டு வேனு? பெண்களிடமே ஒரு ச் சக்தி யிருக்கிறது. வீண் மைக்காவது, உள்ளத்திலிருக் ஆசையை அடக்கி வைத்துக் ண்டு, வெளிக்குக் காட்டாமல் ப்பார்கள்! ஆனல் இரண்டு ம் அவர்கள் கட்டுக்கே ங்குவதில்லை! அவைகளைக் கண் த்தான் எனக்கு மிருந்த ச!"

"எவை, அத்தான் அவை?"

"வேல் போன்ற உன் விழிகள்! ம் போன்ற உன் உள்ளத்தில் த்தோடும் உணர்ச்சியின் று, அவைகளின் வழியாக யே வந்து விடுகிறதே!......... எனக்கு நன்ருகத் தெரி து!"

"ஆம்! எனக்கும் நன்ருகத் தெரி து. உங்கள் கண்களில் குறும் னம் நர்த்தனம் செய்வதும்!"

"தெரிகிறதா"

"உண்மையாகத்தான் அத் ன்!"

இப்படி இன்பமாகக் காதலர், ளை பேசிக்கொண்டிருந்தனர். ளியில் மழை சோ வென்று த்து கொண்டிருந்தது.

லர் புரியில் **வையாபுரி** தான் யர் பெற்ற சிறந்த வைத்தியர். ளியூர்களில் எல்லா மிருந்து து வைத்திய சாலைக்கு யாளிகள் வருவது வழக்கம். ல நல்ல வருவாயும் அவருக் கிடைத்து வந்தது.

ங்கத்தில் வார்த்தெடுத்த சிலை ன்ற குமுதம், வையாபுரியின் மகள். நல்ல அழகி. வைத்தி ன் மகளானதால், கவலையின் லைபடாமல், வளமாக வளர்ந்து தாள்.

வைத்திய நிமித்தமாக அவள் தை அடிக்கடி வெளியூர்களுக் செல்வது வழக்கம். அந்த ங்களில் தான், அவளும் கலை குமாரும் குதூகலமாகக் ப்பேசி, களிப்புக் கடலில் மூழ் ர்கள்!

குமாரின் வீடு, குமுதினியின் டிற் கெதிரே தானிருந்தது. ருக்கும் போதிய அளவு செல் ருந்தது, ஆனல் அவனுக்குத் ம் தகப்பனுமில்லை. அவனது அன்னையும் தந்தையும் ஆவிநீத்து ஆண்டுகள் சில ஆகின்றன. வீட்டில் அவனும், அவனது அத்தையும் தானிருந்தார்கள்.

குமார் ஓவியக் கலையை ஒழுங்காக, சித்திர கலா வித்யாலயத்தில் பயின்று தேர்ச்சியும் பெற்ருன். உயிரும் ஒளியும் பெற்ற உணர்ச்சி ததும்பும் ஓவியங்கள் வரைவதில் அவன் ஈடு இணையற்றவன். அவனுடைய சித்திரங்கள், காலத்தால் அழிக்க முடியாத, நாட்டின் நிரந்தரமான கலை பொக்கிஷங்கள். நியாயப்படி, அவன் திறமைக்கு ஏற்றபடி, அவனுக்குச் சேர வேண்டிய பேரும் புகழும் கிடைத்திருக்கிறதா என்ருல், இல்லை யென்றுதான் கூறவேண்டும். காரணம் அவன் ஒரு திராவிடனைகப் பிறந்ததுதான்!

மேல் நாடுகளில் மட்டும் அவன் பிறந்திருந்தால், நிச்சயம் மேதினி முழுவதும் அவன் கீர்த்தி பரவியிருக்கும். அல்லது ஆரிய குலத்திலாவது உதித்திருந்தால், அகில இந்திய புகழையாகிலும் அடைந்திருப்பான்.

தன் இனத்திற்குத் துரோகம் செய்து, துரோகத்தோடு மட்டும் நில்லாது இனத்தையே காட்டிக் கொடுத்து, ஆரியதாசனுகி யிருந்தால், இன்று அவனைச் சுதந்திரத் திற்கு உழைத்த வீரர், தேசிய ஓவியர் என்றெல்லாம் துதிபாடி, அவன் புகழைப் பரப்பி யிருப்பார்கள். பெரிய பெரிய நிதிகளெல்லாம் வசூலித்திருப்பார்கள். பிரதான நகரொன்றில், அலங்கரித்த ஒரு பெரிய மண்டபத்தில், அவனை அமர்த்தி அவனைச் சுற்றிலும் ஆரிய அணங்குகளும், தேசீயவாதிகளும், புடைசூழ்ந்து, மலர் மாலைகள் பல அணிவித்து, வாழ்த்துக்கள் வழங்கி, வந்தவரெல்லாம் அவன் தலையில் ரோஜா மலரைத் தூவச் செய்து, பத்தாயிரம் இருபதாயிரம் கொண்ட பண முடிப்புகள் பல அவன் கையில் கொடுத்திருப்பார்கள்.

காகங்களுக்கும் இனப் பற்றிருக்கும் பொழுது, கலைஞனுக்கா இல்லாமல் போய்விடும். அவன் என்ன குள்ள மனத்தானு குலத்தைக் காட்டிக் கொடுக்க? வீரமிக்க அவன் விபீடணனுகத் துணிவானு? கலையின் பெயரால் கம்பனுகத் திகழ இசைவானு? எப்படி இசைவான், வரலாற்றினை நன்குணர்ந்தவனுயிற்றே அவன்! நாட்டின் நலம் முன், தன் நலம் பின் என்று கருதுபவனுயிற்றே! தன்னை ஈன்றெடுத்த மாபெரும் திராவிடத்தைத் திருத்தும் கடமையை மேற்கொண்ட காளையாயிற்றே!

குமாரும், குமுதினியும் வெறும் காதற் சுவையுள்ள பேச்சிலேயே பொழுதை யெல்லாம் போக்கமாட்டார்கள். சிரித்துக் களிக்கும் நேரங்களில், சீர்திருத்தக் கொள்கைகளையும் அடிக்கடி அவளுக்குக் கூறுவான் அவன். காதலொடு கலந்து காதலன் தரும் அரிய கருத்துகளை, அவளும் அன்றுட வாழ்க்கையில் அவளால் இயன்ற அளவு செயலில் காட்டி வருவாள்.

கோயிலுக்கு, முதலில், அவள் சென்று கொண்டிருந்தாள். காரணம் காட்டி அவன் கண்டித்தான். "காமுகர்களின் கோட்டமாயிற்றே கோயில்! ஆரியர்கள் கொழுப்பதற் கென்றல்லவா ஆலயங்கள் என்னும் ஆரியப் பண்ணைகள் வேலை செய்கின்றன! நீ அங்கே செல்வது அழகா? யோசித்துப்பார் கண்ணே!" என்று சீர்திருத்தக் கருத்துக்களென்ற மருந்தை காதலென்ற தேனில் குழைத்துத் தருவான்.

மருந்தும் நன்ருக வேலை செய்யும். "செய்தி தெரியாததால் சென்றேன் அத்தான். இனி அந்தக் கல் மண்டபத்துள் காலெடுத்து வைக்க மாட்டேன்!" என்று தேன் மொழியாள் தான் திருந்தியதையும் தன் தீர்மானத்தையும் தெரிவிப்பாள். இப்படி ஒத்த உள்ளமும் உருவமும் பருவமும்உடையவர்கள் அவர்கள்.

குமார், குமுதினியை வெறும் பெண்ணுக மணக்கவிரும்பவில்லை, வீரமகளாக்கி, விவேகத்தின் சிகரமாக்கி விவாகம் செய்து கொள்ள ஆசைப் பட்டான்.

அறையில், இன்ப வெள்ளத்தில் மிதந்து கொண்டிருந்த காதலர்கள் பயங்கரமாக ஒரு இடி இடித்ததைக் கேட்டுச் சிறிது திடுக்கிட்டார்கள். விடாமல் மழை கொட்டிக் கொண்டே யிருந்தது! இடை இடையே மின்னலும் இடியும்!

(9-ம் பக்கம் பார்க்க)

1. தென்றலும் புயலும்

இயற்கை அன்னையின் மடியிலே தலை சாய்த்துப் படுத்துத் தூங்கும் தனி அழகு வாய்ந்தது மலர்புரி. மகிழ மரங்களும், புன்னை மரங்களும் மா, பலா மரங்களும், முல்லை, மல்லி, ரோஜாக் காடுகளும், மலர் புரியில் செழித்து வளர்ந்திருந்தன.

அவ்வூரில், ஒவ்வொரு வீட்டின் பின்புறத்திலும் ஒரு சிறிய மலர்த் தோட்டமாவது இருக்கும்.

மலர் புரியில் நுழையும் பொழுதே, பூக்களின் நறுமணம் நம் உள்ளத்தை மகிழ்ச்சியில் ஆழ்த்தும். புலவர்கள் 'மலர்புரி' என்பது, அவ்வூருக்குக் காரணப் பெயர்தான் என்று வாதாடுவார்கள். காரணப்பெயரோ, இடு குறிப் பெயரோ, நாம் விரும்பவில்லை- நமக்கு ஓய்வுமில்லை அவ்வாராய்ச்சியில் இறங்க; ஆனால் அதன் வளப்பத்தையும், அழகையும் பார்க்கும் எவரும் அவ்வூருக்கு அப்பெயர் தான் பொருத்தம் என்று கூறாமல் இருக்க முடியாது.

ஒருநாள், அந்தி மயங்கும் நேரம் வானத்தில் மெள்ள மெள்ள கரு மேகங்களின் கூட்டம் காற்றில் மிதந்து வந்து கொண்டிருந்தது. நேரம் செல்லச் செல்ல மின்னல், பளிச் பளிச்சென்று கண்களைப் பறித்தன. மழையின் வருகையை முரசறைந்து தெரிவித்தது இடி. தூறல் சிறிது சிறிதாக ஆரம்பித்து, கனத்த மழை கொட்டியது! வானம் தெளித்த தேனைப் பருகி உலகம் உள்ளம் குளிர்ந்தது!

உலகத்தின் உள்ளம் குளிர்ந்ததே அன்றி, அறையினுள் உட்கார்ந்து கொண்டிருந்த **குமாரின்** உள்ளம் குளிரவில்லை! மெதுவாக எழுந்தான். தன் அத்தை தூங்குகிருளா, இல்லையா என்பதைக் காண அறையை விட்டு வெளியே வந்தான். அத்தை, குறட்டை விடுவதைக் கண்டதும் குடையை எடுத்துக்கொண்டு எதிர் வீட்டிற்குப் பறந்தான்! காற்று சிறிது பலமாகவே வீசிக்கொண்டிருந்தது.

பறந்து வந்த ஆண் புறாவை, காதல் மொழிகளாலும், அன்பு சிந்தும் விழிகளாலும் வரவேற்ருள் **குமுதம்!**

காதலர் கை கோத்துக் கொண்டு களிப்போடு உள்ளே சென்றனர். தனியறை!

"உட்காருங்கள் அத்தான்!" என்ருள் குமுதம். இருவரும் அங்கிருந்த அழகிய கட்டிலின் மேல் அமர்ந்தார்கள்.

"என் மனதுடன் ஒவ்வொரு விநாடியும் போராடிக்கொண்டே இருக்கிறேன், குமுதம்!"

"ஏன் அத்தான்?"

"குமுதம், குமுதமென்று எந்நேரமும் அதே நினைவாக அமைதியின்றி, அலைந்து கொண்டேயிருக்கிறது என் மனம்......"

"போங்கள்! எப்பொழுதும் தங்களுக்குக் கேலிதான்."

"சதங்கையொலி போன்ற உன் சிரிப்பு எல்லா சஞ்சலங்களையும் போக்கி விடும். ஆனல் ஆசை அனலை மட்டும் ..."

"சரி, சரி! அத்தான் கையை விடுங்கள்!"

"முடியாது கண்ணே! ஒரே ஒரு முத்தம்......"

"எவ்வளவு அவசரம்! கரத்தை விடுங்கள்."

"வரத்தைத் தந்த பின்னர் தானே, தேவி, வளைக் கரத்தை விட முடியும்!"

"அரிசியா என்ன ... போட, கேட்டதும்!"

"என்னைப் பிச்சைக்கா... காண உனக்கு ஆசையாகு..."

"இப்பொழுது மட்டும் ... வாழ்கிறதோ! 'தாயே தர்ம... அகிலாண்டேஸ்வரி'—இ... மையாளனது வாய்ச்சொ... 'ஆடும் மயிலே, ஓடும் மானே... குயிலே, சேல் விழியாளே, ... மேனியாளே'—இது வர்ண... கப் பேசும் தங்களது ... அவன், பசியைப் போக்க ... மிடும்படிக் கொஞ்சு... தாங்களும் தான் 'பசி' ... றீர்! சிறிது கனியச் சிவ... முத்தம் தா என்கிறீர்! மற்... பிச்சையென்று தானே இ... பெயர்!"

"சபாஷ் குமுதம்! ... முதலில் இருந்தவள் இப்... பெரிய பேச்சாளி ஆகிவிட்... கண்ணே! நான் கவிக்க... மளிக்க மாட்டாயா?..... களுக்கே ... தானே!"

"ஆம் அத்தான்! ... உண்மை! ஆண்கள் ... கொடுமையால் பெண்களி... சத்திலுள்ள நீரெல்லாம், ... ராய் வெளியே வந்து வி... எப்படி அத்தான் அவர்க... சம ஈரமாயிருக்க முடியும்? ... உங்களுக்கேன் கோபம்... போதுமா......இன்னுமா? ... போதுமா?...இனி முடியா..."

"குமுதம்! என் கண்ணே... டிப்பட்டதென்று விவரிக்... யாத இன்ப உணர்ச்சி எ... ளத்தில் பொங்குகிறது! ... மொழி உகுக்கும் உன் ... யைக் கண்டு மகிழ்கிறேன்... விட இனிமை வாய்ந்த... குரல், உன் செக்கச் ... பவளம் போன்ற இ... கிடையே, வெண் முத்... போல் பிரகாசிக்கும்... ..."

"போதும், போதும்; எ... யாசே போதும்! ஒவியமே, ... தாங்கள் காவியம் கூட ... வீர் போலிருக்கிறதே!"

"உயிரோவியத்தைக் ... ரசித்துச் சுவைப்பவனுக்கு... காவியம் செய்வதா கடின..."

"போதும் அத்தான். ... இது எத்தனையாவது ... தெரியுமா?"

(11-ம் பக்கம் பார்க்...

Edited Printed and Published by P. C. Manickavachagam alias Kanchi Manimo...